
# நற்றமிழ்க்குடில்

தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய இதழ்

குடில் : 2 | அக்டோபர் 2019 | விருந்து : 3



சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

- தனிச்சுற்று -

# நற்றமிழ்க்குடில்

**அக்டோபர் 2019**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் குழு | : | மு. சத்யா<br>முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு<br><br>அ. ஸ்டெல்லா மேரி<br>அ. பர்ஸானா<br>ஆ. வள்ளி<br>இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு<br><br>அ. உமா மகேஸ்வரி<br>சா. யோகேஸ்வரி<br>இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு |
| ஆலோசனைக் குழு | : | டாக்டர் சேது குமணன்<br>கல்லூரித் தலைவர்<br><br>முனைவர் ம.சம்ஷாத்<br>கல்லூரி முதல்வர்<br><br>பேராசிரியர் சே.கண்மணி<br>தமிழ்த்துறைத் தலைவர்<br><br>தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் |
| வெளியீடு | : | சோகா தமிழ்ப்பேரவை<br>சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சென்னை - 600 099. |
| விலை | : | ரூ.10/- |
| அச்சு | : | "ஸ்பெஷல் எபெக்ட்ஸ்"<br>மறுதோன்றி அச்சகம், அம்பத்தூர்<br>பேசி : 9282142789 |

## உள்ளே........


தலையங்கம்

தோழிக்குக் கடிதம்

நூல் அறிவோம்

விடுகதைகள்

விடுகதை

அம்மா..

கட்டுரை

மலரே..

பழங்கதை கேளு

மாய சதுரம்.

சொல் விளையாட்டு

கவிதை

ஒழிப்போம் நெகிழியை

கல்லூரி நிகழ்வுகள்

தூரிகைத் தூரல்கள்


# நற்றமிழ்க்கூடல்

மாணவ இலக்கிய இதழ்


கூடல் : 2 விருந்து : 3

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

அக்டோபர் 2019



நமது இந்திய சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட நமது இந்தியாவின் 'தேசத் தந்தை' என்று அழைக்கப்படும் மகாத்மா காந்தி அவர்களின் பிறந்த தினத்தை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2ஆம் தேதியை 'காந்தி ஜெயந்தி' ஆகக் கொண்டாடுகிறோம். இவ்விழா, அனைத்து மதத்தவர்களும் வாழும் நமது நாட்டில் கொண்டாடப்படும் தேசிய விழாக்கள் மற்றும் பண்டிகைகளில் மூன்றாவது தேசிய விழாவாக கருதப்படுகிறது. நம் நாட்டின் தேசிய விடுமுறை தினமாகவும் கொண்டாடப்படுகிறது.

இத்தினம், 'சர்வதேச அஹிம்சை தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்தியத் தலைவர்களில் எப்போதும் நினைவில் நிற்கும் இவர், அகிம்சை மற்றும் சத்யாக்ரக வழிகளைப் பின்பற்றி, நம் நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தவர். அவ்விரு கொள்கைகளுக்காக உலகப் பிரசித்தி பெற்றார்.

இவ்விரு கொள்கைகளைப் பின்பற்றுவது அவ்வளவு எளிதல்ல. மேலும் அக்கொள்கைகளே ஒருவரின் வாழ்வின் இலக்குகளை அடைவதற்கான மிகவும் பயனுள்ள முறைகள் என்பதை நிரூபித்தார். அவரின் இந்த நம்பிக்கையே, அனைவரும் அவரை கவனிக்கச் செய்தது. வரலாறு காணாத மிகப்பெரிய சுதந்திரப் போராட்ட வீரர்களுள் ஒருவராகப் போற்ற செய்தது.

அவருடைய தனித்துவமான கொள்கைகளால் உலகளவில் உள்ள பெருந்தலைவர்களான மார்ட்டின் லூதர் கிங், ஜேம்ஸ் லாசன், நெல்சன் மண்டேலா போன்றோர் ஈர்க்கப்பட்டதால், அவர் இன்றளவும் உலகம் முழுவதும் அனைவரின் மனத்திலும் நிலைத்து நிற்கிறார்.

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அவர்கள், 1869 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 02 ஆம் நாள், இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள 'போர்பந்தர்' என்ற இடத்தில் கரம்சந்த் காந்திக்கும், புத்திலிபாய்க்கும் மகனாகப் பிறந்தார். பள்ளியில் படிக்கும் போதே

நேர்மையான மாணவனாக விளங்கிய அவர், தன்னுடைய 13ஆம் வயதிலேயே கஸ்தூரிபாயை திருமணம் செய்து கொண்டார்.

பதினெட்டு வயதில் 'பாரிஸ்டர்' எனப்படும் சட்டப்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார். தன்னுடைய வழக்கறிஞர் கல்வியை வெற்றிகரமாக முடித்து, பாரதம் திரும்பிய காந்தி, பம்பாயில் சிறிது காலம் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1893ஆம் ஆண்டு ஒரு இந்திய நிறுவனத்தின் உதவியால் தென் ஆப்பிரிக்காவில் பணிபுரிய பயணம் மேற்கொண்டார். தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரிலுள்ள நீதிமன்றத்தில் 'தலைப்பாகை அணிந்து வாதாடக் கூடாது', எனப் புறக்கணிக்கப்பட்ட நிகழ்வும், மற்றொரு நாள் பிரிட்டோரியா செல்வதற்காக இரயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்தபோது, 'வெள்ளையர் இல்லை' என்ற காரணத்தால் பயணம் செய்ய மறுக்கப்பட்ட நிகழ்வும், அவருடைய மனதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இதனால் 1894-ஆம் ஆண்டு 'இந்திய காங்கிரஸ்' என்ற கட்சியினைத் தொடங்கி அதற்கு அவரே பொறுப்பாளரானார். அகிம்சை வழியில் தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்திய மக்களின் பிரச்சினையில் வெற்றி கண்ட மகாத்மா காந்தி, இந்தியா திரும்பியதும், ஆங்கிலேயர்களிடமிருந்து நமது நாட்டை மீட்க அகிம்சை வழியில் போராடினார்.

அதன் பின்னர், இந்தியா திரும்பிய அவர், ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதன் நோக்கமாக, 1921 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'ரவ்லத் சட்டம்' மற்றும் 'ஜாலியன் வாலாபாக் படுகொலை' குரல் கொடுக்கவும், 1919 இந்திய அரசு சட்டத்தில் இந்தியருக்கு வழங்கப்பட்டிருந்த குறைவான அதிகாரங்களை ஏற்க மறுத்ததை வெளிக்காட்டவும் காந்தி 'ஒத்துழையாமை' இயக்கத்தினை 1922ஆம் ஆண்டில் தொடங்கினார். இளையத் தலைமுறை மற்றும் தேசியவாதிகளிடையே இந்த இயக்கம் பெரும் ஆதரவைப் பெற்றது. இவ்வியக்கத்தின் வெற்றியால், காந்தி இந்திய தேசிய காங்கிரஸின் தனிப்பெரும் தலைவராக உருவெடுத்தார். பின்னர் 1922ல்

உத்திரப்பிரதேசத்தில் 'சௌரி சௌரா' என்ற இடத்தில் நடந்த நிகழ்வினால் இவ்வியக்கம் கைவிடப்பட்டது.

1930ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு உப்புக்கு வரி விதித்தது. ஆனால், இதனை ஏற்க மறுத்த காந்தியடிகள், 'தன்னுடைய நாட்டில் விளைந்த பொருளுக்கு அந்நியர் வரி விதிப்பதா?' எனக் கருதி, சத்தியாக்கிரக முறையில் இதை எதிர்க்க முடிவு செய்து, 1930ஆம் ஆண்டு மார்ச் இரண்டாம் தேதி அகமதாபாத்திலிருந்து சுமார் 240 மைல் தூரத்தில் இருந்த தண்டியை நோக்கி நடைபயணம் மேற்கொண்டார். இதனால், காந்தியுடன் பேச்சு வார்த்தை நடத்தி, அவர்கள் விதித்த உப்பு வரியை திரும்பப் பெற்றுக் கொண்டனர். 'உப்பு சத்தியாக்கிரகம்' என்ற இந்நிகழ்வு இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது எனக் கூறலாம்.

1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8ஆம் தேதி ஆங்கில அரசுக்கு எதிராக 'ஆகஸ்ட் புரட்சி' என அழைக்கப்படும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தினைத் தொடங்கிய அவரின் மன உறுதியையும், அகிம்சை பலத்தையும் கண்ட ஆங்கில அரசு திகைத்தது. இறுதியில், காந்தியின் இடைவிடாத போராட்டத்தால், 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அவரது பங்களிப்பை கௌரவிக்கும் விதமாக, தமிழ்நாட்டில் காந்திக்கு அவரது தியாகத்தைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் சென்னை கிண்டியில் 'காந்தி மண்டபம்' மற்றும் 'அருங்காட்சியகம்' அமைந்துள்ளது.

மதுரையில் இராணி மங்கம்மாள் காலத்தில் அமைக்கப்பட்ட கட்டிடத்தில் 1959 முதல் 'காந்தி அருங்காட்சியகம்' செயல்பட்டு வருகிறது.

முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரிக் கரையில் நினைவு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகிது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்

என்று நாமக்கல் கவிஞர் காந்தியின் அறவழிப் போராட்டப் பெருமையை பாடலாகப் பாடியுள்ளார்.



குறிக்கோளை அடையும் முயற்சியில் தான்
மகிமை இருக்கிறது அந்த
குறிக்கோளை அடைவதில் இல்லை..........

பொறுமையும் விடாமுயற்சியும் இருந்தால்
சிரமங்கள் எனும்
மலையை வென்று விடலாம் .........

காந்தியின் அறவழியில் சென்று, நாமும் வளமான இந்தியாவை மேலும் செழிக்கச் செய்வோம்.


அ.பர்ஸானா
இளங்கலைத் தமிழிலக்கியம்
மூன்றாமாண்டு.


## ஹைக்கூ (குறும்பா)

பஞ்சம் இல்லாமல் பாயும் தண்ணீர்
சடு குடு என்று துள்ளி ஓடின
அவன் எழுதும் கவிதைகள் !!



காற்றின் இசையில்
அசைந்தாடிய மரத்தின்
இலைகள் உதிரவில்லை
நீராடிய பெண்ணின் கூந்தல் !!

இருள் சூழ்ந்த உலகில்
சிறு வெளிச்சம் தேடி
நிமிர்ந்து பார்க்கின்றன
ஏழையின் பார்வை !!


ய.பல்லவி
முதலாமாண்டு வணிகவியல்
'ஆ' பிரிவு



# தோழிக்குக் கடிதம்.



அன்புள்ள தோழி,

நான் நலம். நீயும் உன் பெற்றோரும் நலமா? நீ கடந்த மாதம் அனுப்பிய கடிதத்தைப் படித்தேன். நம் பள்ளியின் ஆண்டு விழா குறித்து அதில் எழுதி இருந்தாய். என்னால் வர இயலாததை எண்ணி வருந்துகிறேன்.

விழாவினைச் சிறப்பிக்க, ஒரு பட்டதாரியும், விளையாட்டு வீரரும் வருகை தந்தனர் என்று குறிப்பிட்டு உள்ளாய். ஒருவர் படிப்பால் பிரபலமானவர் என்றும் மற்றொருவர் விளையாட்டால் பிரபலமானவர் என்றும் கூறியுள்ளாய். மேலும் ஒருவருக்குச் சிறந்து விளங்குவது கல்வியா? அல்லது விளையாட்டா? என்று கேட்டுள்ளாய்.

ஒருவருக்கு கல்வி என்பது இன்றியமையாதது ஆகும். நாம் பிறரிடம் இருந்து பெற்று, பிறருக்கு வழங்கும் ஒரே செல்வம் கல்விச் செல்வம் ஆகும். ஒருவருக்கு அழியாத செல்வம் கல்வி என்றும் பிற செல்வங்கள் அழிந்து விடும் என்பதை வள்ளுவர்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" - என்று கூறுகிறார்.

புத்தகங்களை வாசிப்பதன் மூலம் நல்ல குணங்களைப் பெற முடியும். "புத்தகமே ஒருவனுக்குச் சிறந்த நண்பன் ஆவான்". எனவே, நம்மை பிறர் மதிப்பதற்கு இன்றியமையாதது கல்வி ஆகும்.

படிப்பு மட்டும் இருந்தால் போதுமா? போதாது. ஒருவருக்கு சுறுசுறுப்பைத் தருவது விளையாட்டு ஆகும். ஆரோக்கியமான உடலைப் பெறுவதற்கு விளையாட்டு சிறப்பிடம் பெறுகிறது. இப்போது விளையாட்டுத் துறையில் பலர் சாதிக்கின்றனர்.

ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் விளையாட்டில் சாதிக்கின்றனர்.

"கல்வி என்பது ஒரு தாய் பிள்ளையைப் பெற்று எடுப்பது போன்றது. விளையாட்டு என்பது பிள்ளையைப் பராமரிப்பது போன்றது."

ஒருவர் கல்வியையும் விளையாட்டையும் இரு கண்களாக கருத வேண்டும். எனவே, சாதனையாளர்களுக்குக் கல்வியும் விளையாட்டும் சமநிலை பெற்றிருக்க வேண்டும்.

தோழி....நீ கல்வியிலும் விளையாட்டிலும் சாதனை பெற வாழ்த்துகிறேன். இது பற்றிய உன் கருத்துகளை அடுத்த கடிதத்தில் எழுத மறவாதே.

*சா.யோகேஸ்வரி*

இளங்கலைத் தமிழிலக்கியம்
இரண்டாமாண்டு

## மேற்கோள்

1. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – அதைத்
   தொழுது படித்திடடி பாப்பா !! – *பாரதியார்*

2. வீறுடைய செம்மொழி தமிழ்மொழி! உலகம்
   வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி! – *பெருஞ்சித்திரனார்*

3. இருப்பாய் தமிழா நெருப்பாய்! இதுவரை
   இருந்தது போதும் செருப்பாய்! – *கவிஞர் காசி ஆனந்தன்*

4. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும்
   பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழி
   – *பரிதிமாற் கலைஞர்*

5. தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை – *பாரதிதாசன்*

**ம.சந்திரலேகா**

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு



நூலின் பெயர் : நம்மைச் சுற்றி.....

நூலாசிரியர் : ஆடானை சுகுமார்

வெளியீட்டு நாள் : 16.09.2018



ஆடானை சுகுமார் இயற்றிய "நம்மைச் சுற்றி" என்ற நூலில் "சுமை" என்ற தலைப்பு முதலாக "கடல்நீர் உப்பானதே! நம் கண்ணீரால்!" என்ற 37 கட்டுரைகளைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாக இந்நூல் உள்ளது.

அந்த வகையில் 2001 ஆம் ஆண்டு முதல் மாத சிற்றிதழாக அச்சிடப்பட்டு 107 இதழ்களாக வெளிவந்த "உதவும் உள்ளங்கள்" என்ற இதழில் ஆடானை சுகுமாரின் பல்வேறு தலைப்புகளில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பே நம்மைச் சுற்றி என்ற நூலாகும். அதனை ஞா.செல்வகுமார் அவர்கள் பதிப்பாளராக இருந்து வெளியிட்டுள்ளார்.

இவரின் 'சுமை' என்ற கட்டுரையில் பல மனிதர்கள் தங்கள் சட்டைப்பையில் சில காகிதங்களையும், முகவரி அட்டைகளையும் வைத்துக் கொண்டு இருப்பர். ஆனால் பழைய சட்டையில் இருந்து புதிய சட்டையை மாற்றும் போது அவற்றைத் தன்னுடனே சுமையாகக் கொண்டு செல்வர். எனவே தெரிந்தோ தெரியாமலோ தேவையில்லாத குப்பைகளை நாம் தேவையானது என எடுத்துச் செல்கிறோம். அவை தேவையில்லாதது எனத் தெரிந்த பிறகே அதனை எடுத்து எறிகிறோம்.

அதுபோல பலர் தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் தேவையற்ற குப்பைகளைக் கூட தேவையானதாக எண்ணி மனசுக்குள் சுமந்து கொண்டு திரிகின்றனர்.

எனவே சுமை என்ற கட்டுரையின் வாயிலாக மனிதர்கள் எதை சுமையாகக் கருதினாலும் அதனை குப்பையைப் போல

தூக்கி எறிந்தால் அச்சுமை நீங்கி விடும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

இந்நூலில் படித்ததில் பிடித்த கட்டுரையில் ஒன்றான "நீங்கள் அறிவாளியா? புத்திசாலியா?" என்ற கட்டுரையில், ஒருவன் "படகு பழுதானவுடன் தான் மட்டும் தப்பித்தால் போதும்" என்று ஆற்றில் குதித்து நீந்திச் செல்கிறான். ஆனால், மற்றொருவன் படகினைச் சரி செய்து படகில் உள்ள அனைவரையும் கரை சேர்க்கிறான். இதில் தான் மட்டும் ஆபத்தில் இருந்து தப்பித்தால் போதும் என்று நினைத்தவன் புத்திசாலி. ஆனால் அனைவரையும் கரை கொண்டு சேர்த்தவனே அறிவாளியாவான் என்று கூறுகிறார்.

பெண்களைப் போற்றும் விதமாக "பெண்மை போற்றுவோம்!" என்ற தலைப்பில் ஒவ்வொரு பெண்ணுக்கும் நாம் கொடுக்கின்ற மரியாதையும், மதிப்பும் தான் நம் தாய் மண்ணுக்கு நாம் செலுத்தும் வீரவணக்கமாக அமையும் என்றும், அதனால் தாயாய், தாரமாய் இருந்து நம்மை ஆளாக்கிய பெண்மையை எப்போதும் போற்ற வேண்டும். அதுவே ஒவ்வொரு ஆணின் கடமையே ஆகும் என்கிறார்.

எனவே ஆடானை சுகுமார் அவர்களின் "நம்மைச் சுற்றி" என்ற நூலின் ஒவ்வொரு தலைப்பிலும் ஒவ்வொரு மனிதனும் எப்படி வாழவேண்டும் என்றும், தன் துன்பங்களை குப்பைகளாகத் தூக்கி எறிந்து செல்ல வேண்டும் எனவும், பிறருக்கு உதவும் எண்ணத்தோடு அனைவரும் ஒன்றாய் செயல்பட வேண்டும் என்றும் தெரிவிக்கிறார்....

**பெ.சாந்தி**

இளங்கலைத் தமிழிலக்கியம், மூன்றாமாண்டு

## சிரிப்போ சிரிப்பு



**EB**-க்கு போன் பண்ணி மழை நின்னு 8 மணி நேரம் ஆச்சே கரண்ட் எப்போ வரும்னு கேட்டா......?

உங்க போன்ல இன்னுமா சார்ஜ் நிக்குது என்ன மாடல்னு கேக்குறாங்க.....

# விடுகதைகள்



1. தாளமில்லாத ஆட்டம்
   தாய்மார்கள் விரும்பாத ஆட்டம் எது?

2. ஆண்டுதோறும் வரும் வரி
   அடுத்தடுத்து வரும் வரி. அது எவை?

3. நாக்கு இல்லாதவன்
   நல்லது சொல்வான். அது என்ன?

4. தாய் தித்திப்பாள்
   மகன் புளிப்பான், மகள் மணப்பாள்


**து. சாந்தினி**
வணிகவியல் 'அ' பிரிவு


5. பட்டுச்சட்டை போட்டவன்
   பார்க்க அழகு கொண்டவன்
   தட்டி மேலே பறப்பவன்
   தாவித் தேனைக் குடிப்பவன் யார்?

6. சுட்டெரிக்கும் விளக்கு, சூடான விளக்கு,
   அணைக்க முடியாத விளக்கு,
   மாலை வந்தால் தானே அணையும். அது என்ன?



7. அம்மா படுத்திருக்க
   மகள் ஓடிக் கொண்டிருப்பாள். அவள் யார்?

8. பள்ளிக்கூடம் போகிய பட்டம்மாளுக்கு
   கையிலே ஒரு டை, தலையிலே ஒரு டை.

9. தண்ணீர் கரையோரம்
   தவமிருக்கும் வெள்ளைச் சாமியார்.
   அவன் யார்?

10. இடியும் மின்னலும் இங்கே உண்டு
    முடிவில் வருவது மழையல்ல
    புகை. அது என்ன?

**விடைகள் :**
1. சூதாட்டம்
2. ஜனவரி, பிப்ரவரி
3. புத்தகம்
4. பால், தயிர், நெய்
5. வண்ணத்துப்பூச்சி
6. சூரியன்
7. அம்மி, குழவி
8. குடை, ஜடை
9. கொக்கு
10. பட்டாசு



# அம்மா!

பிறக்கும் வரை கருவறையில் சுமந்தாய்
பிறந்த பின் தோள்களில் தாங்கினாய்

இறக்கும் வரை நெஞ்சில் சுமந்தாய்
இணையற்ற அன்பை என்னுள் பொழிந்தாய்

தேயாத நிலவாய் என்றும் நிலைத்தாய்
தேன் சிந்தும் வார்த்தையால் ஊக்கப்படுத்தினாய்

பெண் என்ற இனத்திற்குப் பெருமை சூடினாய்
பொன்னணிந்த கைகளால் தன்னம்பிக்கை
ஊட்டினாய்.....

கோவில்கள் ஏறவில்லை கோபுரங்கள் பார்க்கவில்லை
உயிர்தந்த தெய்வமாய் அருகில் நின்றாய்

வெற்றிகள் தலைக்கேறாமல் தோல்விகள் என்னை வருடாமல்
என் முன்னோடியாய் நின்றுவழி நடத்தினாய்!

உறவுகள் எத்தனை கடந்தபோதும் - நம்
உறவைப் பிரிக்க இயலாமல் வெட்கப்படுகிறது!

என்னை நடக்க வைத்துப் பார்க்க வேண்டும்
என்ற உன் ஆசையை மீறி

என்னை விழவிடாமல் கவனித்து நின்ற
உன் தாய்ப்பாசம் வென்றது!.........

சு.சோபியா சாரோன் ஏஞ்சல்
முதலாமாண்டு கணிதம்

- அம்மா!

# புலவர் குழந்தை



பெயர் : புலவர் குழந்தை
பிறப்பு : ஜூலை 1, 1906
இறப்பு : செப்டம்பர் 22, 1972

இவர் தமிழறிஞரும் புலவரும் ஆவார். இவர் செய்யுள் மற்றும் உரைநூல் வடிவில் பல நூல்களை எழுதி வெளியிட்டு உள்ளார். ஈரோடு மாநகரத்தின் தெற்கே உள்ள 'ஓல வலசு' என்ற சிற்றூரில் முத்துசாமிக் கவுண்டர், சின்னம்மை என்பவருக்கு மகனாக புலவர் குழந்தை பிறந்தார். இவர் தன்னுடைய பத்தாவது வயதிலேயே கவிபாடும் திறமையைப் பெற்றார். பாட்டின் ஓசை கேட்டு பாடவல்லவர். இவருடைய பொழுது போக்கு பாட்டு எழுதுவதே ஆகும்.

1934-இல் சென்னை பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்றார். புலவர் குழந்தை அவர்கள் ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கி 37 ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

**'இராவண காவியம்'** என்ற பெருங்காவியத்தை வழங்கியவர். சொல்லின் செல்வன் ரா.பி.சேதுப்பிள்ளை போன்ற சக்தி நெறியுள்ள சான்றோர்களாலும் பாராட்டப்பட்ட காவியம் இவருடைய இராவண காவியம்.

தந்தை பெரியாரின் மீது மரியாதையும், சுய மரியாதை கொள்கை மீது பற்றும் கொண்டவர். 1948-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் கலந்து கொண்டு, அவர் ஆற்றிய உரை அனைவரையும் கவர்ந்தது. பெரியார், திருக்குறளுக்குப் பொருளுடன் உரை எழுத அறிஞர் குழு ஒன்றினை அமைத்தார். அதில் முக்கியமானவர் புலவர் குழந்தை. பின் இருபத்தைந்து நாட்களில் திருக்குறள் முழுமைக்கும் உரை எழுதினார். இந்த உரை **திருக்குறள் குழந்தையுரை** என்ற நூல் வெளியிடப்பட்டது.

இவர் அரசியலரங்கம், நல்லதம்பி சர்க்கரைத் தாலாட்டு, ஆடி வேட்டை, வீரகுமாரசாமி, காவடிச்சிந்து போன்ற பல செய்யுள் நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவர் இலக்கண நூல்களுக்கும் மிக எளிமையாக உரை எழுதியுள்ளார். புலவர் குழந்தை **"வேளாண்"** என்ற மாத இதழை 1946 முதல் 1958 வரை நடத்தி வந்தார். இவர் பேச்சிலும் வல்லவராக விளங்கினார்.

**மு.ரம்யா**
இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

சிறுகதை



# வாக்குறுதி

மங்களாபுரம் என்னும் நாட்டை ஓர் அரசன் ஆண்டு வந்தார். அரசருக்கு சிறு வயது முதல் ஒரு நண்பர் இருந்தார். அந்த நண்பர் ஒரு நாள் அரசரைக் காண வந்தார். அரசரும் அவரை அன்புடன் வரவேற்றார். இருவரும் நலம் விசாரித்துக் கொண்டனர். நண்பர் அரசரைப் பார்த்து, "மன்னா! எனக்கு ஒரு பத்து ரூபாய் கடனாகத் தர வேண்டும்" என்று கூறினார், "சரி தருகிறேன்" என்று மன்னரும் கூறினார். கூறிவிட்டு, "நண்பா, நாம் இருவரும் பக்கத்து ஊரில் நடக்கும் திருவிழாவிற்குப் போய் வருவோம்" என்றார். நண்பரும் "சரி" என்றார். இருவரும் புறப்பட்டுச் சென்றனர்.


போகும் வழியிலேயே மன்னர் நண்பருக்கு 100 ரூபாய் கொடுத்தார். கொடுத்து விட்டுச் சொன்னார். "நாம் இருவரும் நிறைய தின்பண்டங்கள் வாங்கிச் சாப்பிட வேண்டும்" என்று கூறினார். ஊரை அடைந்ததும் திருவிழாவில் சுண்டல், பொரி, மாங்காய் வடு, ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிட்டு விட்டு ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர். வரும் வழியிலேயே, "மன்னா 10 ரூபாய் தரவில்லையே?" என்று கூறினார் நண்பர். "தருகின்றேன், தருகின்றேன்" என்று கூறினார் மன்னர்.

தம் அரண்மனை அடைந்ததும் நண்பர் விடைபெற்றுச் செல்ல விரும்பினார். செல்வதற்கு முன், "மன்னா 10 ரூபாய் எங்கே?" என்று கேட்டார். அதற்கு மன்னர் செல்லமாக கோபித்துக் கொண்டு சொன்னார், "100 ரூபாய் கொடுத்திருக்கின்றேன். நீ 10 ரூபாய், 10 ரூபாய் என்று கேட்டுக் கொண்டிருக்கிறாயே" என்று கூறினார். அதற்கு நண்பர், "மன்னா தாங்கள் கூறிய 10 ரூபாயை விட 100 ரூபாய் பெரிதல்ல" என்று கூறினார். அதற்கு மன்னர் சற்று அதிர்ச்சி அடைந்து 10 ரூபாய் கொடுத்து அனுப்பினார். பின்பு மன்னர் யோசித்தார் நான் வாக்களித்தவற்றை மக்களுக்கு செய்யாதிருப்பதை உணர்த்துகின்றார் நண்பர் என்பதைப் புரிந்து கொண்டார்.

**பொருள் :** தலைமை பொறுப்பில் இருப்பவர்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும்.

**நா.பால கீர்த்தனா**

இளங்கலை நிர்வாகவியல் இரண்டாமாண்டு.



# தமிழ் மொழியின் சிறப்பு






**முன்னுரை :**

தமிழர்களின் தாய்மொழியான தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தில் முக்கிய மொழிகளுள் செம்மொழியாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேல் பழைமை வாய்ந்த இலக்கண மரபைக் கொண்டுள்ள நம் தமிழ்மொழி வழக்கில் இருக்கும் செம்மொழிகளில் ஒன்றாகும். நடைமுறையில் ஒன்றான தமிழ்மொழி இருபதாம் நூற்றாண்டில் சிறிது சிறிதாக அழிந்து வருகின்றது. தாய் மொழியான தமிழ் மொழியின் சிறப்பை அறியாதார் இன்றும் நம் மொழியை சரளமாக பேசுவதற்கு தத்தளிக்கின்றனர். தமிழ் மொழியின் சிறப்பின் மூலம் தமிழ் நாட்டின் கலாச்சாரம், பண்டைய நாகரீகங்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழ் மொழிக் குடும்பம் :**

திராவிட மொழியான தமிழ் மொழி, பல வெவ்வேறு கிளை மொழிகளைக் கொண்டுள்ளது. இக்கிளை மொழிகளில் தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலியன அடங்கும். ஏறத்தாழ ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழும், மலையாளமும் ஒரே மொழியின் இரு வட்டார வழக்குகளாகவே இருந்து வந்தன. இரு பகுதியினருமே இம்மொழியினைத் தமிழ் என்றே வழங்கி வந்துள்ளனர். பதின்மூன்று மற்றும் பதினான்காம் ஆண்டு காலப் பகுதியிலேயே இவ்விரு மொழிகளும் தனித்தனி வட்டாரப் பகுதி மொழிகளாக வேறொரு பெயரில் பகுக்கப்பட்டன.

தமிழ் மொழியே பிறவனைத்து மொழிகளுக்கும் ஆலமரம் போன்று விளங்குகின்றது. மற்ற மொழிகள் அதன் கிளை விழுதுகளாக விளங்குகின்றன. தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகள் தமிழின் ஒலியைக் கொண்டவைகளே. ஆனால் அதன் எழுத்து வடிவங்கள் சற்றே வேறுபாடுகள் நிறைந்தவை. இந்திய மொழிகளிலே தமிழ் மொழி மட்டுமே (247) இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களைக் கொண்ட ஒரே செம்மொழியாகும்.

எடுத்துக்காட்டாக, உலக மொழியான ஆங்கிலம் இருபத்தாறு எழுத்துக்களை மட்டுமே கொண்டுள்ளது. ஆங்கிலம் தனித்தன்மை வாய்ந்ததல்ல. தமிழ்மொழியின் தனித்தன்மையே அதன் முக்கிய சிறப்புகளுள் ஒன்றாகும்.

**தமிழ் நூல்கள் :**

தமிழ் மொழியின் சிறப்பு மற்றும் பண்டைய தமிழ் நாட்டின் நாகரீகங்கள் முதலியன தமிழ் நூல்கள் மூலம் அறியலாம். அக்காலப் புலவர்கள் தமிழ் மொழியை தங்கள் உயிர் மூச்சாகக் கொண்டவர்களாயிருந்தனர். உலகளவிலேயே முதலில் மொழி பெயர்க்கப்பட்டது தமிழ் நூலே ஆகும். திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் மிகவும் அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சில ஆங்கிலேய வல்லுநர்கள் பரிசுத்த வேதாகமமே, உலகளவில் அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டது என்று கூறுகின்றனர்.

**திருக்குறள் :**

திருக்குறள் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும், 133 அதிகாரங்களையும் கொண்டது. இந்நூல் உலகத்திற்கு நல்ல நெறிகளைக் கூறுவதால் இந்நூல் உலகப்பொதுமறை என்றும் அழைக்கப்படுகின்றது. திருக்குறளானது ஏழு சீர்களையும், இரு அடிகளையும் கொண்ட குறட்பாக்களைக் கொண்டுள்ளது. திருவள்ளுவர் இரண்டு வரிகளிலேயே முழு அர்த்தங்களையும் விளக்கியுள்ளார். திருக்குறளில் உள்ள ஒவ்வொரு அதிகாரங்களும் அனைத்து காலத்திற்கும் ஏற்ப வகையில் வள்ளுவன் எழுதியுள்ளார்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை.

தம்மைத் தோண்டுபவரையும் தாங்கும் நிலம் போல, தம்மை இழிவுபடுத்துபவரையும் பொறுத்துக் கொள்ளுதலே தலை சிறந்த பண்பாகும்.

**தமிழரின் பண்பாடு**

தமிழர்கள் வீரவிளையாட்டுக்கு பெயர் தேர்ந்தவர்கள். வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டு ஆண்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றாகும். அதில் அனைத்து வீரர்களும் ஒரு காளையை தங்களின் வீரத்தால் அடக்க வேண்டும். வீரர்கள் அனைவரும் தங்களின் காயங்களைப் பாராமல் உற்சாகத்துடன் பங்கு கொள்வார்கள். இடம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தங்களது உணவு பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டாலும் தங்களின் கலாச்சார வழக்கங்களில் மாற்றம் அடைவதில்லை. அண்டை நாட்டு மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் தமிழ் மொழியைக் கற்று வருகின்றனர். வெளிநாட்டில் வாழும் தமிழ் வாழ் மக்கள் இன்றும் ஆர்வத்துடன் வெளிநாட்டவர்க்கு தமிழ் மொழியைக் கற்றுக் கொடுக்கின்றனர். வெளிநாட்டு வாழ் மக்கள் இன்றும் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் நாகரீகங்களைப் பற்றி அறிந்து கொள்கின்றனர்.

**தமிழரின் சிற்பக்கலை :**

தமிழரின் சிற்பக்கலை அனைவரையும் கண்டு வியக்க வைக்கின்றது. வெளிநாட்டவர்கள் தமிழ்நாட்டின் சிற்பக் கலையைக் கண்டு வியக்கின்றனர். எடுத்துக்காட்டாக, தஞ்சை பெரிய கோவில் தமிழர்களின் சிறந்த அடையாளமாக விளங்குகின்றது. தமிழர்கள் தங்களின் தெய்வபக்தி மற்றும் நம்பிக்கைகளின் மூலமாக அறிவியலின் நுண்ணோக்கத்தைக் கற்றுத் தந்துள்ளனர்.

**முடிவுரை :**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பழைமையும், தொன்மையும் வாய்ந்த தமிழ் மொழி உலகிலேயே தலைசிறந்த மொழியாகும்.

லா.வெர்ஜின் மேரி
முதுகலை இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்

# சுள்ளி மலர்

சி. சூரியா முதுகலைத் தமிழ்



திணை : தாவரம்

சுள்ளி அல்லது செம்முள்ளி பற்றிய குறிப்பு சங்கப் பாடல்களில் இரண்டு இடங்களில் மட்டும் உள்ளது.

குறிஞ்சி நில மகளிர் குவித்து விளையாடியதாகக் குறிஞ்சிப் பாட்டு குறிப்பிடும் 99 மலர்களில் ஒன்று என்பது ஒரு குறிப்பு.

குறிஞ்சி நில மகளிர் கூந்தலில் சூடிக்கொண்ட மலர்கள் என்று திணைமாலை நூற்றைம்பது என்னும் நூல் குறிப்பிடும் மலர்களில் ஒன்றாக இருப்பது மற்றொரு குறிப்பு.

சுள்ளி, சுனையில் பூக்கும் நீலம், சோபாலிகை, செயலை ஆகிய 4 மலர்கள் மகளிர் சூடிக் கொண்டதாக இந்தப் பாடல் தெரிவிக்கிறது.

"சுள்ளி சுனைநீலம்" (திணைமாலை நூற்றைம்பது)
எரிபுரை ஏறுழம், சுள்ளி, கூவிரம் (குறி.பாட்டு-அடி-66)

இதில் உள்ள 'சுள்ளி' என்னும் மலரை 'ஞாழல்' என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

குறிஞ்சிப்பாட்டு தொகுத்துக் கூறும் 99 மலர்களில் சுள்ளி மலரும், ஞாழல் மலரும் வெவ்வேறாகக் காட்டப்பட்டிருப்பதால் சுள்ளி மலரை ஞாழல் மலர் எனக் கொள்ள வழி இல்லை.

சுள்ளி என்னும் சொல்லால் காய்ந்து கிடக்கும் சிறு குச்சி மற்றும் விறகைக் குறிக்கும் வழக்கு இக்காலத்திலும் உண்டு. எனவே, இந்த மலர், குச்சி போல் மலரும் நாயுருவி மலர் என்பது பொருத்தமானது.

இந்த மலர் 'சுள்' என்று விலங்குகளின் உடலிலும், மக்களின் ஆடைகளிலும் வைத்துப் பற்றிச் சென்று தன் இனத்தைப் பரப்பிக் கொள்கிறது. மக்களின் ஆடைகளில் 'சுள்' என்று தைப்பதால் இதனைச் சுள்ளி என்றும் அழைக்கின்றனர்.



# பழங்கதை கேளு

**பழமொழி : களவும் கத்தும் மற.**

<u>பொய்யான விளக்கம்</u> :

களவும் கத்தும் மற என்னும் பழமொழி **களவும் கற்று மற** என்று மாறியுள்ளது. இதன் விளக்கம் தீய பழக்கமான களவை (திருட்டை) நாம் கற்றுக் கொண்டு மறந்து விட வேண்டும்.

<u>விளக்கம்</u> :

களவு - திருடுதல், கத்து - பொய் சொல்லுதல். தீய பழக்கமான திருடுதல், பொய் சொல்லுதல் இவற்றை ஒருவன் தன் வாழ்நாளில் மறந்து ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

மு.சத்யா
முதுகலைத் தமிழிலக்கியம்
இரண்டாமாண்டு.

# விவசாயம்





வானம் பொழியவில்லை
பூமி விளையவில்லை
தொழிற்சாலைகள் விளைந்தன
அதனால்,
நம் விவசாயம் கருகிவிட்டதடா!
விதை போடுவது மறந்ததடா!
லாபத்தை எண்ணி நெஞ்சில்
நஞ்சை விதைத்துக் கொண்டோமடா!
மின் அணு கருவிகளைத் தூக்கி எறிந்து
கலப்பையைக் கையில் எடுத்து!
மீண்டும் எழுந்துவா தோழா!!
விவசாயம் காத்து களைகளைக் களைந்திட!

பி.லோகஸ்ரீ
முதலாமாண்டு வணிகவியல் 'அ' பிரிவு

# மாய சதுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 | | 26 | 19 | |
| | 32 | | 21 | | 25 |
| 31 | | 2 | | 27 | |
| | 28 | 33 | | 10 | |
| | | 34 | | 14 | |
| 4 | | | 13 | | 11 |

* இந்த சதுரத்தை எவ்வாறாக கூட்டினாலும் 111 என்ற பதில் வர வேண்டும்.

மா. மாணிக்க விஜி
கணிதவியல் முதலாமாண்டு

விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 35 | 1 | 6 | 26 | 19 | 24 |
| 3 | 32 | 7 | 21 | 23 | 25 |
| 31 | 9 | 2 | 22 | 27 | 20 |
| 8 | 28 | 33 | 17 | 10 | 15 |
| 30 | 5 | 34 | 12 | 14 | 16 |
| 4 | 36 | 29 | 13 | 18 | 11 |



# கலைச்சொல்லாக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | Assets | - | சொத்துக்கள் |
| 2. | Bad debts | - | வாராக்கடன் |
| 3. | Clossing Stock | - | இறுதிச் சரக்கிருப்பு |
| 4. | Premium | - | முனைமம் |
| 5. | Prepaid | - | முன்கூட்டிச் செலுத்தியவை |
| 6. | Drawings | - | எடுப்புகள் |
| 7. | Dividend | - | பங்காதாயம் |
| 8. | Journal | - | குறிப்பேடு |
| 9. | Ledger | - | பேரேடு |
| 10. | Cross Profit | - | மொத்த இலாபம் |


**M. லாவண்யா**
முதலாமாண்டு வணிகவியல் 'இ' பிரிவு




சிறு வயதில் இருந்து தொடர்ந்த பந்தம்
சட்டென்று அது கலைந்து போக
நீ என்னை மறுத்த போதும் வலிக்காத நெஞ்சம்
நீ என்னை மறந்த போது துடிதுடிக்க!
யாருக்கும் தெரியாமல் வைத்திருந்த கனவு
கனவாகவே கலைந்து போக!
காலையில் ஏங்குகிறேன்
விழிக்கும் போது இவை கனவாக இருக்க
நடப்பது நிஜம் என்று தெரிந்தும்
நிஜத்தை நிழலால் மறைக்க எண்ணுகிறேன்
உன்னை எனக்குள் புதைக்க எண்ணுகிறேன்
புதைந்திருக்க நீ தயார் என்றால்.......!!!


ஸ்ரீ மோனிகா
முதுகலை இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்.


# சொல் விளையாட்டு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கோ | இ | ரா | மா | வ | தா | ர | ம் | யா | மு | ட |
| ள் | ஆ | ம் | மா | போ | வ | ச | ர | ண் | யா | பை |
| கை | ஈ | ற | கொ | ச | ளை | சு | பா | கா | லி | தை |
| தோ | ர | ம் | யா | சு | யா | போ | கி | ர் | பு | ர் |
| நீ | மு | வி | ல் | செ | ப | து | னி | து | பே | ய் |
| ல | சி | ர் | றை | னா | தி | டை | சி | ப் | அ | ஜ |
| கே | கா | யா | அ | ம் | மா | ஊ | டு | ஜி | சி | வி |
| சி | வ | வை | அ | ப் | பா | ட் | த் | மு | வி | ஜி |
| ஆ | சி | ஔ | மை | கீ | எ | ர் | மூ | கி | க் | சே |

**வினாக்கள் :**

1. தமிழன்னையின் வளையலாகத் திகழும் நூல் எது?
2. சீவகன் எத்தனை பெண்களை மணந்தான்?
3. கம்பர் தனது நூலுக்கு இட்ட பெயர் யாது?
4. குண்டலகேசிக்கு எதிராக எழுந்த சமணக் காப்பியம் எது?
5. பெரிய புராணத்தின் ஆசிரியர் யார்?
6. கொன்றை வேந்தன் யாரால் இயற்றப்பட்டது?

மு.கிருஷ்ணசெல்வி
முதலாம் ஆண்டு உயிர்வேதியியல்.





**விடைகள் :**

1. வளையாபதி
2. எட்டுப்பேர்
3. இராமாவதாரம்
4. நீலகேசி
5. சேக்கிழார்
6. ஔவையார்

# காலத்தை வென்ற மொழி



சங்க காலப் புலவர்கள்
பாடல் பாடி பரிசு
பெற்ற மொழி!

வான் வரை உயர்ந்து
தனக்கென ஓர் இடத்தைப்
பெற்ற மொழி!

வரலாற்றுச் சுவடுகளால்
வாழ்க்கை வரலாற்றை
கல்வெட்டாய்க் கொண்ட மொழி

சாதாரண மொழியாய்
அல்லாமல் - மக்கள்
பேசும் வழக்காறு
மொழியாய் அல்லாமல்
மக்களின் உணர்வில்
கலந்த மொழி - நம்
தமிழ்மொழி!!!

இயல் இசை நாடகமாய்
மூன்று பிரிவை - ஒருங்கே
கொண்ட மொழி!


பழைமையும் வளமையும்
பெற்ற மொழி! - வரலாற்றுத்
தொன்மையைப் பெற்ற மொழி!

இறவா இலக்கிய இலக்கண வளம் பெற்று
தனக்கெனத் தனிநோக்கும்
போக்கும் கொண்ட மொழி!!!

முதல் இடைச் சங்கம்
கடல்கோளால் அழிந்தும்
அழியாது நிலைத்து
நிற்கின்ற மொழி! நம் தமிழ்மொழி!!!

அ.ஸ்டெல்லாமேரி
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## எங்கள் காமராசர் எங்கள் பாரி





உடையில் எளிமையாய்
பேச்சில் புதுமையாய்
வயதில் இளமையாய்
உதவுவதில் உண்மையாய்
பாசத்தில் பாங்கனாய்
காரைக்குடியின் காமராசராய்
சென்னையில் வலம் வரும்
பாரி மன்னனை ஒத்த
எங்கள் குமணரே......



**ஜே.சோனா**
முதுகலைத் தமிழிலக்கியம்
முதலாமாண்டு

# சிறப்பு தினங்கள்

| | | |
|---|---|---|
| அக்டோபர் : | 02.10.2019 | காந்தி ஜெயந்தி |
| | 03.10.2019 | உலக இயற்கை தினம் |
| | 04.10.2019 | உலக விலங்கு நல தினம் |
| | 05.10.2019 | உலக ஆசிரியர் தினம் |
| | 06.10.2019 | உலக வன விலங்கு தினம் |
| | 08.10.2019 | உலக முதியோர் தினம் |
| | 09.10.2019 | உலக தபால் தினம் |
| | 11.10.2019 | சர்வதேச பெண் குழந்தைகள் தினம் |
| | 15.10.2019 | உலக வெள்ளை கருப்பு தினம் |
| | 16.10.2019 | உலக உணவு தினம் |
| | | உலக மாணவர் தினம் |
| | 30.10.2019 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் |
| | 31.10.2019 | தேசிய ஒருங்கிணைப்பு தினம் |

# மரம்



வானத்தை நோக்கி
இரவல் கேட்கும்
நேரம் வந்துவிட்டது...............
மனிதா! மரத்தை
வெட்டினாய்.......! - வானம்
கூட இரக்கம் காட்டவில்லை!!!
ஆகாயத்தை சபித்தால் - கருணை
மழையில் நனைந்து விடுவாயா?

மரம் மனிதத்தை
காக்கும் ஓர்
இயற்கை வங்கி...........!
நிழலாக.......!
காற்றாக......!
விளையாட்டு கூடமாக.......!

மரம் மழையாகி
மழை தண்ணீராய்.........
தண்ணீர் மக்கள்
குடிக்கும் நீராதாரமாய்........
விவசாயிகளுக்கு உற்ற
நண்பனாய்.........! - மரத்தை
வெட்டுமுன் மனிதா இதை
சிந்திப்பாயா?

ஒவ்வொரு மரமும்
நம்மிடம் பேசும்.......
அதன் தேவையை
நாம் உணர்ந்தால்........

மனிதா! மரத்தை வெட்டினால்
என்ன கிடைக்கும்.......?

வீடுகட்டுவாய்........!
தொழிற்கூடங்களை பெருக்குவாய்.......!
இடங்களை விற்பாய்.........!- பின்
நீருக்கு என்ன செய்வாய்?

மரத்தை அழித்து
மனிதன் தன்னைத்தானே
அழித்து கொள்கிறான்........
அறிந்தும் அறியாமலும்
அடுத்த தலைமுறையையும்
சேர்த்து அழிக்கிறான்........

ஒவ்வொரு மரமும்
நம்மைப் பார்த்து
கேள்வி கேட்டால்........
அதற்கு பதில் கூற
முடியுமா நம்மால்?
மரம் நம்மைப் பார்த்து
“நான் எனக்காகவா
வாழ்கிறேன்.......!
என் ஆயுளின் பயனை
உங்களுக்கு தானே
கொடுக்கிறேன்!!!
எதற்காக இந்த
கருணை கொலை!!!
என்னில் வரும் உணவை.........
நீரை..... காற்றை
அருந்துக் கொண்டு என்னை
அழிப்பது நியாயமா?......
என்று மரம் கேட்டால்.......
சிந்திப்போம்...........

- அ.ஸ்டெல்லா மேரி

இளங்கலைத் தமிழ் இலக்கியம்
மூன்றாமாண்டு

# ஒழிப்போம் நெகிழியை



"பூமியைக் கெடுக்கும் பூதம் யாரு? நெகிழி என்றே அதற்கும் பேரு"
"துணிப்பை என்பது எளிதானது, தூர எறிந்தால் உரமானது
நெகிழி என்பது அழகானது, வீசி எறிந்தால் விஷமானது"

பிளாஸ்டிக் என்ற ஆங்கிலச் சொல்லிற்கு நெகிழி எனப் பொருள். இந்நெகிழிப் பொருட்களில் 10% பொருள்களே மீண்டும் பயன்படுத்த உகந்தது மீதம் 90% பொருட்கள் எரிக்கப்படுகின்றன. மருத்துவமனைகளில் சேரும் நோய் பரப்பும் கழிவுப் பொருளான பஞ்சு போன்றவற்றை எரிக்கப் பயன்படும் "இன்சினரேசன்" என்ற சாம்பலாக்கும் கருவி இப்போது நெகிழிக் குப்பைகளை எரிக்கப் பயன்படுகிறது. அவையும் டையாக்சின் என்ற நச்சுப் புகையைத்தான் வெளியிடுகின்றது. மறுசுழற்சி, கழிவு மேலாண்மை போன்றவை பயனற்றவையாகவே கருதப்படுகின்றது.

கால்நடைகள் அதிக அளவில் நெகிழியை உட்கொள்கின்றன. அதனால் நெகிழி பொருட்களை ஜீரணிக்க கூடிய அளவிற்கு சுரப்பிகள் விலங்குகளுக்கு இல்லை. இதனால் குறைந்தபட்சம் 3 நாட்கள் செரிமான குழாயில் நெகிழி பொருட்கள் தங்கும். விலங்குகள் கருவுற்ற நேரங்களில் நெகிழியை உட்கொண்டால் கருவிற்கும் ஆபத்து. அரிய வகை விலங்குகள் நெகிழிப் பைகளில் அழியக் கூடிய நிலைக்கு செல்கின்றன. எனவே நெகிழியின் தீமைகளை உணர்ந்து அதன் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும்.

நெகிழிப் பைகளில் சூடான உணவுப் பொருட்களை வாங்கிச் செல்லும்போது நெகிழி சூடாகி வேதியியல் மாற்றங்களால் "ஹைட்ரோ கார்பன்" மற்றும் "பியூரான்" போன்ற நச்சு வாயுக்கள் உணவில் கலந்து விடுகின்றன. அந்த உணவை

உண்பவர்களுக்கு நுரையீரல் பாதிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் வயிற்றில் ஜீன்களைத் தூண்டுகிறது. நெகிழியால் ஏற்படும் அபாயம் புரியாமல் பலரும் அவசரத் தேவைகளுக்காக சூடான உணவுப் பொருட்களை நேரடியாக நெகிழிச் சுவர்களில் வாங்கிப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த அவசர உலகில் நெகிழியை எல்லா இடங்களிலும் பயன்படுத்துகிறோம். எடுத்துச் செல்ல எளிதாக இருக்கும் என்று நாம் பயன்படுத்தும் நெகிழி Carry bag-க்குள் ஒளிந்திருக்கும் பயங்கரம் பற்றிப் பலருக்கு புரிவதேயில்லை. சாதாரண வெப்ப நிலையிலேயே நீருடன் வினைபுரியும் சக்தி நெகிழிக்கு உண்டு.

காலச் சக்கரம் சுழலும் போது பழையது என்று நாம் கழித்துக் கட்டியவை அனைத்தும் மீண்டும் புதுப்பொலிவுடன் நம்மிடையே புழக்கத்திற்கு வருகிறது.

நாமும் பழையன மறக்காமல் துணிப்பையோடு வளம் வருவோம். நெகிழியை ஒழிப்போம்! நன்றி.

– ர.சங்கீதா
இளங்கலை தமிழிலக்கியம், மூன்றாமாண்டு

## சிரிப்போ சிரிப்பு

யானையை விட பெருசா இருக்கும். இருந்தாலும் எடையே இருக்காது. ஆனா லட்சம் பேர் சேர்ந்தாலும் அத தூக்க முடியாது.

அது என்ன?



ரொம்ப யோசிக்காதீங்க !! அதுதான் யானையோட நிழல்.......

பெ.சாந்தி
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## துறை நிகழ்வுகள்

12.09.2019 **பாரதி நாள் விழா - பட்டி மண்டபம்**

தலைமை : முனைவர் அரு.அபிராமி
உதவிப் பேராசிரியர், சோகா இகெதா கல்லூரி

தலைப்பு : ***பாரதி கவிதைகளில் விஞ்சி நிற்பது இயற்கையா? மொழியா***

13.09.2019 **இலக்கணப் பயிலரங்கம்**

முனைவர் பேரா. மருதூர் அரங்கராசன்
இலக்கண ஆய்வறிஞர்

புலவர் வெற்றியழகன்
இலக்கண ஆய்வறிஞர்

முனைவர் பேரா. இரா. இலட்சாராமன்
மேனாள் முதல்வர், மயிலம் தமிழ்க்கல்லூரி

முனைவர் பா. ஜெய்கணேஷ்
தமிழ்த்துறைத் தலைவர்,
எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், சென்னை

19.09.2019 **ஆய்வரங்கம்**

தலைமை : முனைவர் அரு.அபிராமி
உதவிப் பேராசிரியர், சோகா இகெதா கல்லூரி

தலைப்பு : ***தமிழியல் ஆய்வுகள்***

21.09.2019 **இலக்கிய அரங்கம்**

பேரா. முனைவர் மின்னூர் சீனிவாசன்
கவிஞர், எழுத்தாளர்

தலைப்பு : ***பாவேந்தரும் தமிழ் எழுச்சியும்***


# தூரிகைத் தூரல்கள்



**ப.பிரியங்கா**
உளவியல் துறை,
முதலாமாண்டு




**ம.தஸ்னீம் பாத்திமா**
இளங்கலை ஆங்கிலம்,
முதலாமாண்டு





**ஆ.வள்ளி**
தமிழ் இலக்கியம்,
மூன்றாமாண்டு



**கோ.யாமினி**
இளங்கலை பொருளாதாரம்,
முதலாமாண்டு

# தூரிகைத் தூரல்கள்




ஜ.திவ்யா
வணிகவியல்
முதலாமாண்டு

கரத்தால்



ம.பிரசன்னா
இளங்கலை
வணிகவியல்
முதலாமாண்டு




அ.அனிதா
இளங்கலை
வணிகவியல்
மூன்றாமாண்டு